உ

துர்க்காதேவி துணை



கலாநிதி அன்னை

## சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.

அவர்களின்

# 86ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

# “சிவத்தமிழ் விருது” பெறும் சான்றோர்-2011

எம்மண்ணில் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிய மூத்தோரை ஆண்டு தோறும் அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை விழாவில் கௌரவித்துப் போற்றுவது மரபு அவ்வகையில் இவ் ஆண்டு எமது சபையால் கௌரவிக்கப்படும் சான்றோரை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆறு.திருமுருகன்
தலைவர்
நிர்வாகசபை

சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை

# குரு பக்த சிரோன்மணி சமயப் பெரியார் திரு.கே.கே.சுப்ரமணியம் அவர்கள் காரைநகர்



"கே.கே." என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் கே.கே. சுப்ரமணியம் அவர்கள் 06.10.1929ம் ஆண்டு காரைநகர் சின்னாலடி எனும் இடத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர் சிவபூசை வழிபாடு செய்து சிறப்பாக வாழ்ந்தவர்கள்.இவரது மூதாதையர் காரைநகர் ஈழத்து சிதம்பரம் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயம் என்பவற்றின் பரிபாலன பணிகளில் ஈடுபட்டனர்.காரைநகரில் ஆரம்பக்கல்வியை கற்ற இவர் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற போதே இலங்கை சுங்கத்திணைக்களத்தில் உத்தியோகம் பெற்றார். இலண்டன் மலேசியா இந்தியா முதலிய நாடுகளில் புலமைப்பரிசில் பெற்று கல்வி பயின்றார். சுங்கத்திணைக்களத்தில் பதவி உயர்வு பெற்று சிரேஷ்ட ஆணையாளர் நாயகமாக 40 ஆண்டுகள் பணிபுரிந்தார். இலங்கையில் தேவாரப்புகழ் பெற்ற திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்களுடன் தொடர்பு உடையவர். வந்தவரை வரவேற்கும் பண்பு மிகுந்த இவர் இலங்கைக்கு வருகின்ற இந்தியநாட்டைச் சார்ந்தவர்களான திருமுருக கிருபானந்தவாரியார், புலவர் கீரன், திருமதி இளம்பிறை மணிமாறன், திருமதி.சாரதா நம்பியாரூரன்,பேராசிரியர் செல்வகணபதி,சீர்காழி சிவசிதம்பரம் A.K.C நடராஜன் கோட்டூர் இரத்தினம் போன்ற பெரியவர்களை தன் இல்லத்திற்கு வரவழைத்து உபசரித்து மகிழ்ந்தார். இதே போன்று ஈழத்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லையாதீனமுதல்வர்கள், மங்களவாத்திய கலைஞர்களான திரு.N.K பத்மநாதன், V.Kகானமூர்த்தி, M.R.சின்னராஜா போன்றவர்களை எல்லாம் வரவேற்று மகிழ்வு பெற்றவர் கே.கே.அவர்கள். தமது கணவனாரின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாக விளங்கியவர் திருமதி.சரஸ்வதி அம்மையார் என்றால் மிகையாவதென்றில்லை.யோகர்சுவாமிகளின் ஆசிபெற்ற இந்த "புவனம்" என்றழைக்கப்படும் அம்மையார் பெரியபுராணத்தில் வரும் "மனை அறத்தின் வேர்" என்ற தொடருக்கு இலக்கணமாக திகழ்ந்து வருகிறார். சைவப்பணிகளிலும் சமயப்பணிகளிலும் சமயவிழாக்களிலும் தனக்கென முத்திரை பதித்த பெரியார் இவர். பத்திற்கு மேற்பட்ட நூல்களை எழுதி பதிப்புப்பணி ஆற்றி உள்ளார். இவற்றில் மணற்காட்டு முத்துமாரியம்மன் கும்பாபிஷேக மலர் ஈழத்துசிதம்பர கும்பாபிஷேக மலர் தர்மபூஷணம் மகேஸ்வரன் மலர் என்பன தனித்துவம் வாய்ந்தன.

இந்திய ஆதீனங்களுடன் தொடர்பு கொண்ட கே.கே.அவர்களுக்கு காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் "அருள்நெறித் தொண்டர்" எனவும் நல்லூர் ஆதீனம் "கலாரசிகமணி" எனவும் அலங்கை அரசு "சமாதான நீதிபதி"எனவும் காஞ்சிகாமகோடி பீடம் "பரோபகார மணி" எனவும் கனடா சித்திவிநாயகர் ஆலயம் "சிவநெறிக்காவலன்" எனவும் திருக்கைலையப்பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் "சிவதிருத்தொண்டர்" எனவும் கோவை பேரூர் ஆதீனம் "அடியார்க்கு நல்லவர்" எனவும் பட்டங்களை வழங்கி கே.கே.ஜயாஅவர்களை கௌரவம் வழங்கி வாழ்த்தி உள்ளார்கள்.

பல்வேறு அமைப்புக்களிலும் நிறுவனங்களிலும் அங்கத்துவம் வகித்து ஆற்றிய பணிகள் அளவிடற்கரியது.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் சித்திரத்தேர்த் திருப்பணி ஆரம்பித்த காலத்தில் தேர்த்திருப்பணி சிறப்புற ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை.சித்திரத்தேருக்குரிய வர்ணப்பூச்சு மைகளை மலேசியா சிங்கப்பூரிலிருந்து கொண்டு வருவதற்கு ஒழுங்கு செய்து தமது பணியை திறமையாக உதவிக்கரம் நீட்டினார்.அதே போன்று 1981ம் ஆண்டு துர்க்கையம்மன் மஹாகும்பாபிஷேக விழாவிற்கும் இராஜகோபுர கும்பாபிஷேகத்திற்கும் வருகை தந்த ஸ்தபதி.திரு.ச.தேவலிங்கம் அவர்களையும்குருஜீ.ஹரிதாஸ் சுவாமிகளையும் அழைத்து வர ஆவன செய்த பெரியாராவார்.

இப்பெருமகனார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறநிதிய விழாவில் இவர் ஏகாந்தநிலையில் இருப்பினும் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் எமது அறநிதியசபை பெருமையடைகின்றது.

## முதுபெரும் புலவர் திரு.வை.க.சிற்றம்பலம் புலவர் அவர்கள் இணுவில்



இணுவில் மஞ்சத்தடியை பிறப்பிடமாகக் கொண்ட முதலியார் வை.க.சிற்றம்பலம் அவர்கள் 16.09.1914ம் ஆண்டு பிறந்தார். இவருடைய பெற்றோர் கந்தர் அவர்களும் ஆனந்திப் பிள்ளையும் ஆவார். இணுவில் சிவகாமசுந்தரி அம்பாளை குல தெய்வமாகக் கொண்டவர். மேலும் இவர் ஆரம்பக் கல்வியை இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், உயர் கல்வியை தற்பொழுது இந்து மகாவித்தியாலயமாக விளங்கும் இணுவில் சைவ மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

1932ம் ஆண்டுதொடக்கம் 1934ம் ஆண்டு வரை திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றார். சிறந்த தமிழ் புலவராகவும் பல பண்டிதராகவும் விளங்கியவர். மதுரை பண்டிதர் பரீட்சைக்கான பாடங்களை கற்றார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வித்துவான் ந.சுப்பையாபிள்ளை போன்ற கல்விமான்களிடம் கல்வி கற்ற பெருமை கொண்டவர். அளவெட்டி கும்பிழாவளை பிள்ளையார் கோயில் நான்மணிமாலை தொடக்கம் பல நான்மணி மாலைகள் பிரபந்தப் பாடல்கள் திருவிரட்டை மணிமாலைகள், மும்மணிமாலைகள், திருப்பதிகங்கள், திருப்பள்ளி எழுச்சிப்பாடல்கள், திருஊஞ்சல் பாடல்கள், அந்தாதிப்பாடல்கள், பிள்ளைதமிழ்ப்பாடல்கள், போன்ற பல்வேறுபாடல்களை இயற்றி முதுபெரும் கவிஞராக விளங்குகிறார். பல கும்பாபிஷேக மலர்களிலும், பாடசாலை கல்வி மலர்களிலும், சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும், பல்வேறு கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதி சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

கோயில்களைப் . பற்றியும் அறிஞர்க்ளைப்பற்றியும் புராணங்களையும் பதிகங்களையும் பாடிய இவர் யோகசுவாமி, சுவாமி விபுலானந்தர், பண்டிதமணி அவர்கள், சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் போன்றவர்களைப்பற்றியும் பாடியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

7.1.2011
16 9-1914
097

நாடளாவிய ரீதியில் பல்வேறு பணிகளைச் செய்த இவர் துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் இணைந்து புராணபடண நிகழ்ச்சிகளிலும், திருமுறை ஓதுதல் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி சிறப்பித்துள்ளார்.

முது பெரும் புலவர் என்ற பட்டத்தை அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவரும் கலாபூஷணமும் என்ற விருதை இந்துகலாச்சார திணைக்களமும் புலவர்மணி என்ற பட்டத்தை யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கமும் வழங்கி பெரியார் வை.க.சிற்றம்பலம் ஐயா அவர்களின் பெருமையை மெருகூட்டி உள்ளனர்.

இவ் ஆண்டு சிவத்தமிழ் அம்மையார் அவர்களின் 86வது அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் எமது அறநிதிய சபை பெருமை அடைகின்றது.

# திருத்தொண்டர்மாமணி திரு.தம்பியப்பா கைலாயபிள்ளை அவர்கள் அக்கரைப்பற்று



அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் தலைவராக விளங்கும் திருத்தொண்டர்மாமணி திரு.த.கைலாயப்பிள்ளை அவர்களுக்கு இவ்வாண்டு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் 86வது பிறந்த நாளில் சிவத்தமிழ் விருது வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.பெரியார் அவர்கள் 1951ம் ஆண்டு மார்ச்மாதம் 20ம் திகதி அக்கரைப்பற்றில் பிறந்தார். இவரின் தந்தையாரைப் போன்று பல்வேறு அமைப்புக்களுக்கும் பல ஆலயங்களுக்கும் தலைவர் ஆகவும் தர்மகர்த்தாவாகவும் விளங்கி பெருமை சேர்த்துள்ளார். மேலும் இவரின் தந்தையார் 15க்கு மேற்பட்ட நாட்டுக் கூத்துக்களை அரங்கேற்றி மக்களிடம் பெரும் பற்றுதலை ஏற்படுத்தியிருந்தார். இறைபணி செம்மலாகிய திரு.த.கையிலாயபிள்ளை அவர்கள் மாதுமை அம்பாள் சமேத பசுபதீஸ்வரர் ஆலய கூட்டுப்பிரார்த்தனை சபை, சுவாமி விபுலானந்தா கலாமன்றம் போன்ற பல்வேறு அமைப்புக்களுடன் தொடர்பு பட்டு தம்மை முழுமையாக சமூகப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ ராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் இ.போ.சவில் பல்வேறு பணிகள் ஆற்றி கணக்காளராக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றாலும் சமூகப்பணியிலும் சமயப்பணியிலும் தம்மை ஈடுபடுத்தி கொண்டு இருந்தார். பல ஆண்டுகள் மஹா கும்பாபிஷேகம் காணாமல் இருந்த அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் முன்னேற்றத்திற்காக பல் வேறு திருப்பணிகளை ஆற்றி மஹா கும்பாபிஷேகம் காண முன்னின்ற பெரியார் என்பதில் உவகை அடைகின்றோம்.

இவர் இல்லற வாழ்வில் இணைந்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக விளங்கிய போதும் இவரது பணிகளின் பெருமையை பாராட்டி இந்தியா பேரூர் ஆதீனம் உலக சைவப் பேரவை மகாநாட்டில் இவகளை தம்பதிகளாக கௌரவித்தது.

1990ம் ஆண்டு அக்கரைப்பற்றில் இடம் பெற்ற கலவரத்தினால் பல உயிர்கள் கொல்லப்பட்டு 500க்கு மேற்பட்ட பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டனர். இவர்களில் ஆதரவுஅற்ற பிள்ளைகளை இவரால் உருவாக்கப்பட்ட சுவாமி விபுலானந்தா இல்லத்தில் சேர்த்துக் கொண்டார். இவ் இல்லம் 1992ம் ஆண்டு இராம கிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசியுடன் அவ் இல்லத்தை ஸ்தாபித்தார். இங்கு 300 பிள்ளைகள் வரையில் வசித்து கல்வியும் புனர் வாழ்வும் பெற்று வருகின்றனர் இவ்இல்லத்தின் வளர்ச்சி கருதி 65 ஏக்கர் காணி நிலத்தை பெற்றுக் கொண்டார். இங்கு பசுப்பண்ணைகள், தென்னம் தோட்டங்கள், வயல் நிலங்களையும் கொண்டதாக விளங்குகின்றது. இவ் இல்லத்தின் வளர்ச்சிக்கு தம்மை நன்கு ஈடுபடுத்தி கொண்டு விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்தது.

சுவாமி சிறுவர் இல்லத்தில் ஸ்தாபகர் ஆகம விளங்கி வரும் திருதொண்டர் மாமணி திரு.தம்பையா கைலாயபிள்ளை அவர்களுக்கு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அன்னையின் 86வது பிறந்தநாள்அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் எமது அறநிதிய சபை பெருமை அடைகின்றது.

# பண்டிதை பொன் பாக்கியம் அம்மையார்
## சுழிபுரம்



"பண்டிதை பொன் பாக்கியம்" என அனைவராலும் அழைக்கப்பெறும் திருமதி பொன்னுத்துரை பாக்கியம் அவர்கள் சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். 21.02.1937ம் ஆண்டு பிறந்த அம்மையார் அவர்கள் சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலை, பண்ணாகம் மெய்கண்டான் பண்டத்தரிப்பு உயர்தர பாடசாலையில் கல்வியைப் பெற்றவர். தமது ஆசிரியர் பயிற்சி காரணமாக 1956 தொடக்கம் 1957 காலப்பகுதியில் திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தமது பயிற்சியை பெற்றார். இங்கு "மௌன தவ முனிவர்" திரு.பொ.கைலாயபதி, இலக்கிசகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களிடம் தமிழையும் சைவத்தையும் முறையாக கற்று பயிற்சி பெற்றார். 1958ம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்ற இவர் செங்குந்தா இந்துக்கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலை, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி என்பவற்றுள் சிறப்பான கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

திருமுருகாற்றுப்படை மனனம் விவேகானந்த பரீட்சை சமய பாடப் பரீட்சை ஆசிரிய கலாசாலை மாணவர்களின் ஓட்டப்போட்டி என்பவற்றில் பங்கு பற்றி பரிசில்களையும் வெற்றி கேடயங்களையும் பெற்றுக் கொண்டார். நாவலர் பெருமான் கட்டுரைப்போட்டியில் 1ம் இடம் பெற்று தவத்திரு குன்றக்குடி அடியார்களிடம் பரிசில் பெற்றார். இவருடைய நாவலர் சரித்திர ஆராய்ச்சி நூல் இவருக்கு ஒரு மகுடம் வைத்தது போன்று அமைந்தது. பண்டிதமணி அவர்களின் முன்னுரையுடன் வெளி வந்த இந்நூலை வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச்சங்கம் வெளியிட்டு பெருமை பெற்றது. பண்டிதை பாக்கியம் அம்மா அவர்கள் ஈழத்திலும் சிங்கப்பூர் மலேசியா இந்தியா ஆகிய இடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகள் தனித்துவம் வாய்ந்தவை. இவர்களின் பணிகளை பாராட்டிய நிறுவனங்கள் சிவத்தமிழ்மணி,செந்தமிழ்மணி போன்ற பட்டங்களை வழங்கி கௌரவித்தமையை அறியலாம். 1998ம் ஆண்டு வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம் மணி விழா எடுத்து பாராட்டி சிறப்பு மலரை வெளியிட்டு கௌரவித்தனர்.

மேலும் இவரை கற்பித்த ஆசான்கள் குறிப்பிடத்தக்கவர்க்கவர்கள். பண்டிதர் சு.ஆறுமுகம், பண்டிதர் செ.துரைசிங்கம், பண்டிதை திருமதி.சத்தியதேவி, துரைசிங்கம் வித்துவான் ந.சுப்பையாபிள்ளை வித்துவான், பொன் முத்துக்குமாரன் வித்துவான் வேந்தனர், பண்டிதை இ.இராசையா என்போரை குறிப்பிடலாம். இவருக்கு ஆங்கிலக் கல்வி கற்பித்தவர் T.N பஞ்சாட்சரம் அவர்கள் என குறிப்பிடும் போது பெருமை அடைகின்றோம். இவ் அம்மையாரை சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் 86வது பிறந்தநாள் விழாவின் போது சிவத்தமிழ் செல்வி விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை அடைகின்றோம்.

## இசைக்கலைமாணி சங்கீதபூஷணம் திருமதி.தர்மபூபதி சிதம்பரநாதன் அம்மையார் கட்டுவன்



இசைக்கலைமாணி தர்மபூபதி சிதம்பரநாதன் அம்மையார் அவர்கள் தெல்லிப்பழை கட்டுவனில் 21.01.1939ம் ஆண்டு பிறந்தார். சைவப்பாரம்பரியத்தில் வாழ்ந்த அம்மையாரின் பெற்றோர்கள், கணவனார், பிள்ளைகள் அனைவருமே இசையை வளர்ப்பதில் முன்னின்று பெருமை வளர்த்தவர்கள். அம்மையாரின் இசை வளர்ச்சிக்கு பேரனார் திரு. தம்பிப்பிள்ளை அவர்களும்,சிறிய தந்தையார் ஆன திரு.வி.ரி.வி.சுப்பிரமாணியம் ஓதுவார் ஐயா அவர்களும் உறுதுணையாக விளங்கினார். ஓதுவார் திரு.சுப்பிமணியம் ஐயா அவர்கள் திருவாவடுதுறை ஆதினத்தால் "ஓதுவார்" என்னும் சிறப்புப்பட்டம் பெற்ற பெருமை உடையவர்.

இசைக்கலைமாணி தர்மபூபதி அம்மையார் தமது ஆரம்பக் கல்வியை கட்டுவன் ஞானோதய வித்தியாசாலையிலும், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடை நிலைக்கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் உயர்நிலைக்கல்வியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றார். 1957தொடக்கம் இசைக்கல்வியையும், வயலினையும் அண்ணாமலை பல்கழைகழகத்தில் கற்று சிறப்பு பட்டம் பெற்றார்.
வயலின் வாத்தியத்தை வித்துவான் கலாநிதி கும்பகோணம் இராஜமாணிக்கம் அவர்களிடமும் அவருடைய மாணவன்T.Sசம்பந்தன் சிவவடிவேல்பிள்ளை ஆகியோரிடம் பயின்ற பெருமை உடையவர்.

சிறந்த ஆசிரியர் ஆகவும்,சிறந்த சொற்பொழிவாளர் ஆகவும் விளங்கிய அம்மையார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று விரிவுரையாளராக பணிபுரிந்த காலத்தில் பல ஆயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்களை இசைஆசிரியர்களாக உருவாக்கினார்.இங்கு 1987-1997வரை விரிவுரையாளராக பணியாற்றிய பெருமை உண்டு.

பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுன்கலைப்பீடத்தில் பகுதி நேர விரிவுரையாளராக பணிபுரிந்து கர்நாடக இசைக்கும், வயலின்வாத்தியத்திற்கும், பண்ணிசை வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றினார்.

• சிரியப்பணியாற்றிய காலத்தில் கண்டாவளை அ .த.க.பாடசாலையிலும், ஏழாலை மகா வித்தியாலயத்திலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்பித்தலை பூரணமாகச் செய்தார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளராக 1974 தொடக்கம் 1975 காலப்பகுதியில் ஆசிரிய மாணவர்களுக்கு வளர்ச்சியுற முன்னுதாரணமாக நின்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரால் ஆரம்பித்து வைக்கப் பெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றினார். அம்மையார் ஆற்றிய தன்னலம் கருதா பணிகளை பாராட்டி சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களால் 1997ம் ஆண்டு நடைபெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழாவின் போது "இசைத்தாய்" எனும் சிறப்புப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

வடஇலங்கை சங்கீதசபை, கீரிமலை சிவநெறிக்கழகம்,கர்நாடக இசைக்கழகங்கள் போன்ற அமைப்புக்கள் நடாத்தும் பரீட்சைகளுக்கு எல்லாம் நடுவராக நின்று பெரும்பங்காற்றினார். இசைசம்பந்தமான சமயம் சம்பந்தமான அறிஞர்கள் சம்பந்தமான கட்டுரைகள் எழுதுவதிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றவர். 1958ம்ஆண்டு இராமாயணம் பாலகாண்டத்தில் இராமர் பாத்திரத்தை நடித்து தமிழறிஞர் II(2).R.P.சேதுப்பிள்ளையால் பாராட்டு பெற்றவர். இதே போன்று ஈழத்துத்தமிழறிஞர்களான பண்டிதமணி, சிவத்தமிழ்ச்செல்வி அம்மா போன்றோரிடம் நன்மதிப்பைப் பெற்றவர். இவரின் சமூகப்பணி நாடளாவியது. தெல்லிப்பழை கலைஇலக்கியக்களம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், உடுவில் வாழ்வகம் ஆகியனவற்றில் ஆற்றிய சமூகப்பணி தன்னிகரற்றது.

இவ்வாண்டு சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் 86வது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் இசைத்தாயும் இசைக்கலைமாணியுமான சங்கீதபூஷணம் திருமதி.தர்மபூபதி.சிதம்பரநாதன் அம்மையார் அவர்களுக்கு "சிவத்தமிழ்ச்செல்விவிருது"வழங்கிக் கௌரவிப்பதில் எமது அறநிதிய சபை பெருமையடைகின்றது.

By Gobi Graphics Mallakam